# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

# 2006 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, அரசாங்க அரசிறையைப் பாதுகாத்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

*(2006 ஆம் ஆண்டு சனவரி மாதம் 06 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

*2006, சனவரி மாதம் 06 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்*

**விலை : ரூபா 6.25** **தபாற் செலவு : ரூபா 5.00**

## 2006 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, அரசாங்க அரசிறையைப் பாதுகாத்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

[2006 ஆம் ஆண்டு சனவரி மாதம் 6 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ. ஒ. 63/2005

**பொது அரசிறையைப் பாதுகாப்பதற்கு ஏற்பாடுசெய்வதற்கும், அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்கு மானதொரு சட்டம்**

பொது அரசிறையைப் பாதுகாப்பதும், அரசாங்கத்துக்கு ஏதேனும் அரசிறை இழப்பைத் தடுப்பதும் தேசியப் பொருளாதாரத்தின் நலன்கருதி அவசியமாகவுள்ளதாதலாலும் : முன்னுரை.

அத்துடன் மேலேயுள்ளதற்குப் பயன்கொடுப்பதற்கென, குறிப்பிட்ட சில குறித்துரைக்கப்பட்ட சட்டங்களின்கீழ் பொது அரசிறையைச் சேகரிப்பதனைப் பயனுள்ள வகையில் வசதிப்படுத்துவதற்கான சட்ட ஏற்பாட்டைச் செய்வது அவசியமாக வந்துள்ளதாதலாலும் :

ஆகவே, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப்பெயர்.

**1.** இச்சட்டம் 2006 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, அரசாங்க அரசிறையைப் பாதுகாத்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

குறித்தசில சட்டங்களின்கீழ் ஆக்கப்படும் கட்டளைகள் அமைச்சரினால் கையொப்ப மிடப்படும் தேதியன்று வலுவுக்கு வருதல் வேண்டும்.

**2.** இதற்கான அட்டவணையின் பாகம் I இல் குறித்துரைக்கப்படும் ஏதேனும் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், அத்தகைய ஏதே னும் சட்டத்தின்கீழ் தோதான அமைச்சரினால் ஆக்கப்படும் கட்டளையொன்று, அவர் தமது கையொப்பத்தை அத்தகைய கட்டளைக்கு எத்தேதியன்று இடுகின்றாரோ அத்தேதியிலிருந்து வலுவுக்கு வருதல் வேண்டும்.

ஏற்றுமதி அல்லது இறுக்குமதித் தேதியானது பிரவேச உண்டியலின் முன்வைப்புத் தேதியாக விருத்தல்.

**3.** இதற்கான அட்டவணையின் பாகம் II இல் குறித்துரைக்கப்படும் சட்டங்களுள் எவற்றிலும் முரணாக அடங்கியுள்ளது எது எவ்வாறிருப்பினும், இலங்கையினுள் பண்டங்களை இறக்குமதி செய்வதன்மீது அல்லது இலங்கையிலிருந்து பண்டங்களை ஏற்றுமதி செய்வதன்மீது ஏதேனும் வரியை, தீர்வையை மிகை வரியை விதிப்பனவை அல்லது வேறு அறவீட்டை விதிப்பனவு

2 - PL 000846 - 1,250 (2005/12)

செய்கின்ற அல்லது அறவிடுகின்ற நோக்கத்துக்காக, விடயத்துக்கேற்ப, இறக்குமதி அல்லது ஏற்றுமதி தேதியானது, எந்தப் பண்டங்கள்மீது அத்தகைய வரி, தீர்வை, மிகை வரி, விதிப்பனவு அல்லது வேறு அறவீடு விதிப்பனவு செய்யப்படுகின்றதோ அல்லது அறவிடப்படுகின்றதோ அந்தப் பண்டங்கள் தொடர்பான பிரவேச உண்டியலைச் சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதியிடம் ஒப்படைக்கும் தேதியாக விருத்தல் வேண்டும்.

**4.** இச்சட்டத்தின் ஏற்பாடுகள், 2004, சனவரி 1 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், 2004, சனவரி 1 ஆம் தேதியன்றும் அத்தேதிக்குப் பின்னரும் அத்தகைய ஏதேனும் சட்டத்தின்கீழ் அமைச்சரினால் ஆக்கப்படும் ஏதேனும் கட்டளை, அத்தகைய கட்டளையில் அமைச்சர் தமது கையொப்பத்தை எத்தேதியன்று இட்டாரோ, அத்தேதியிலிருந்து வலுவிலிருந்துள்ளதாகக் கருதப்படுதலும் வேண்டும். இச்சட்டம் வலுவுக்கு வரும் தேதி.

**5.** இச்சட்டத்தின் சிங்கள மற்றும் தமிழ் உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை இருப்பின் இச்சட்டத்தின் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல் வேண்டும்.

**அட்டவணை**

பாகம் I

1. 1996 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான, (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டம்.

2. 1994 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான, 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தித்தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம்.

பாகம் II

1. 1996 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான, (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டம்.

2. *1994 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தித்தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம்.*

3. *2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர் பெறுமதி வரிச் சட்டம்.*

4. *2003 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான, (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டம்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்